Dr. H. V. HANDE : Sir, is the Government aware of the fact that just because they are handicapped, instead of giving them preferential treatment, they are chucked out. Is it possible for the Government to bring in State Enactment and give instructions to the Public Service Commission to give these handicapped persons preferential treatment and include it in their Code?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சட்டத்தைப் பொறுத்தவரையில் மத்திய அரசாங்கம் கொண்டு வந்தால் தான் நல்லது என்று கருதுகிறேன். நம்முடைய மாநில அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் நம்முடைய எல்லாத் துறைகளுக்கும் குறிப்பாக இப்படிப்பட்ட உடல் ஊனமுற்றவர்களுக்கு டைபிஸ்ட், டெலிபோன் ஆபரேடர், டெஸ்பாட்ச் கிளார்க், லிப்ட் ஆபரேடர், இதுபோன்ற வேலைகளுக்கு பிரஃபரன்ஸ், முதலிடம் கொடுக்க வேண்டுமென்று நாம் வலியுறுத்தி வருகிறோம். ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் என்று ஒதுக்கினால் அதை நடத்துவதில் பல சங்கடங்கள் இருப்பதால், நாம் ஊக்கம் அளிக்கும் முறையில் மட்டும் ஆர்வம் காட்டி வருகிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இம்மாதிரியாக ஊனமுற்றவர்களுக்கு உதவி செய்வதற்கு, அதை ஞாபகப்படுத்துவதற்கு ஒவ்வொரு மாதமும் 3-வது ஞாயிற்றுக்கிழமையும் விழாக் கொண்டாடுகிறார்களே, இந்த மாதம் 19-ம் தேதி எந்தெந்த இடத்தில் கொண்டாடப்பட்டது? அதன் விவரம் என்ன? அதனால் ஏற்பட்ட பலன் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாநில அளவிலே, சென்னையிலே கொண்டாடப்பட்டது. வேறு இடத்தைப் பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை.

மேம்பாலங்கள்

*685 வினா.—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

மாயூரத்தில் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாயூரத்தில் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி 1973-ம் ஆண்டு இறுதிக்குள் முடிவடையும்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே சென்ற ஆண்டு நமது மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு ஏறக்குறைய ரூ. 45 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிற—மிக விரைவாகக் கட்டப்பட்டு வருகிற—அந்த மேம்பாலத்திற்கு மாயூரத்தைச் சேர்ந்த மொழிப்போர் வீரர் மாணவர் சாரங்கபாணி—மொழிக்காக உயிர் நீத்த சாரங்கபாணியின் பெயரைச் சூட்டுவதற்கு அரசு ஆலோசிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அப்படி ஒரு கோரிக்கை எழுதது மூலம் வருமானால், அது பற்றி பரிசீலிக்கலாம்.

6

1972 மார்ச் 24]

*686 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

திருவாரூர் புகைவண்டி நிலையம் அருகில் உள்ள லெவல் கிராசிங்கில் மேம்பாலம் கட்டுவதற்கு திருவாரூர் நகராட்சியிடமிருந்து கோரிக்கை வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. என். கிட்டப்பா :—தலைவரவர்களே, தமிழகத்தின் பல பகுதிகளில் பாலங்கள், மேம்பாலங்கள் அமைவதற்கு மூலகாரணமாக இருக்கும் திருவாரூரில் ஒரு மேம்பாலம் கட்ட அரசு ஆலோசிக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது போன்ற ஒரு கோரிக்கை நகராட்சி மன்றத்திலிருந்து வரவில்லை. கோரிக்கை வந்த பிறகு அது பற்றி பரிசீலிக்கலாம்.

ஏலகிரி மலையில் சின்கோனா பயிரிடுதல்

*687 வினா—திரு. எம். ஏ. லத்தீப்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

வடார்க்காடு மாவட்டம், ஏலகிரி மலையில் "சின்கோனா" மற்றும் "ஜெரேனியம்" பயிரிடுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இல்லை.

அரசுப் பேருந்துகளுக்கான உதிரி உறுப்புகள்.

*688 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

அரசுப் பேருந்து போக்குவரத்துத் துறைக்கு உதிரி உறுப்புக்கள் கிடைக்காத காரணத்தால் பழுதடைந்த பஸ்களைப் பழுது பார்க்கப் படுவது தடைபட்டுள்ளது என்று கூறப்படுவது உண்மையா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இப்போது தமிழக அரசு பேருந்துகளுக்கான உதிரி பாகங்கள் எந்தெந்த கம்பெனிகளிடமிருந்து வாங்கப்படுகின்றது என்பதையும், அவைகளை வாங்குவதிலே காலதாமதம் ஏற்படுவதற்கான காரணம் என்ன என்பதையும், அதைத் தவிர்க்க அரசு மேற்கொண்டு இருக்கும் நடவடிக்கைகளையும் அறிவிக்கக் கோருகிறேன்

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்த அரசுப் போக்குவரத்துத் துறையிலே உள்ள பஸ்களுக்கு 'அசோக் லேலண்டு லிமிடெட், மெசர்ஸ் டாடா இஞ்ஜினீரிங் அண்டு லோகோ மோடிவ் கம்பெனி, மெசர்ஸ் பை-மெடல் பேரிங்ஸ் லிமிடெட்